பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
18 03 2025 7 15
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளில் உத்திசார் ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா – சீனா இடையிலான உறவுகள், கருத்து வேறுபாடுகளைக் கடந்து ஆக்கப்பூர்வமான பாதையில் செல்வதாக இந்தியா தெரிவித்துள்ள கருத்துக்கு சீனா வரவேற்பு தெரிவித்துள்ளது.

3. மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள மஹால் பகுதியில் நேற்று இரு தரப்பினருக்கிடையே மோதல் ஏற்பட்டதால் அங்கு பொதுமக்கள் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

4. ஆந்திர மாநிலம் அமராவதியில் பல்வேறு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்வதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று **Basel** நகரில் தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா – அமெரிக்கா பல்வேறு துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவதற்கான உத்திசார் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்து அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநர் திருமதி துளசி கப்பார்ட் உடன் கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லி வந்துள்ள திருமதி துளசி கப்பார்ட் தம்மை சந்தித்த பின்னர், சமூக வலைதளத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் அமெரிக்கா சென்றிருந்தபோது அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப்பை சந்தித்துப் பேசியது மற்றும் திருமதி துளசி கப்பார்ட் ஆகியோருடன் நடத்திய பேச்சுகளையும் இந்த சந்திப்பின்போது நினைவுகூர்ந்ததாக அதில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, தொழில்நுட்பம், பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைத்து செயல்படுவது மற்றும் உலகம் எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்களை எதிர்கொள்வதில் ஒத்துழைப்பு குறித்தும் அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநரின் பங்களிப்பை இந்த சந்திப்பின்போது திரு. நரேந்திர மோடி பாராட்டினார்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவும், கடல்சார் மற்றும் சைபர் பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும் இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு வருகை தர உள்ளதாகவும், அவரை வரவேற்க 140 கோடி இந்தியர்களும் ஆவலுடன் காத்திருப்பதாக இந்த சந்திப்பின்போது பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா – சீனா இடையிலான உறவுகள் கருத்து வேறுபாடுகளைக் கடந்து பேச்சுவார்த்தையை நோக்கி முன்னேறுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்த கருத்துகளுக்கு சீனா வரவேற்பு தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஆக்கப்பூர்வமான கருத்துகள் பாராட்டத்தக்கது என்றும், இது இரு நாடுகளின் அமைதிக்கும், பரஸ்பர வெற்றிக்கும் பங்களிக்கும் என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. **Mao Ning,** அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் ரஷ்யாவின் காசான் நகரில் சீன அதிபர் **Xi Jin Ping,** பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற வெற்றிகரமான சந்திப்பு இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இரு தலைவர்களுக்கு இடையே பொதுவான விஷயங்களில் ஒருமித்த கருத்து உள்ளதாகவும், இது இரு நாடுகளுக்கு இடையே ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்புக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

புதுதில்லியில் நேற்று காலமான முன்னாள் மத்திய அமைச்சரும், மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானின் தந்தையுமான தேவேந்திர பிரதான் உடலுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார்.

84 வயதாகும் தேவேந்திர பிரதான், உடல்நலக்குறைவால் காலமானார்.

ஒடிசா மாநில பிஜேபி தலைவராக அவர் 3 முறை பொறுப்பு வகித்துள்ளார்.

மறைந்த பாரத பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அமைச்சரவையிலும் அவர் இடம்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள மஹால் பகுதியில் நேற்று இரு தரப்பினருக்கிடையே மோதல் ஏற்பட்டதால் அங்கு பொதுமக்கள் கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மதச் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டதாக வதந்தி பரவியதையடுத்து, இரு சமூகத்தினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீது கல்வீசி தாக்கப்பட்டது.

சில வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இதையடுத்து கலவரத்தைக் கட்டுப்படுத்த காவல்துறையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

மோதலில் ஈடுபட்ட 15 பேரை கண்காணிப்பு கேமராக்களின் உதவியுடன் காவல்துறையினர் கண்டறிந்து கைது செய்தனர்.

வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும், அமைதி காக்குமாறும் மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சட்டம் ஒழுங்கை பராமரிக்க நாக்பூரில் உள்ள மஹால் பகுதியில் மறு உத்தரவு வரும் வரை 144 தடை உத்தரவு நீடிக்கும் என்று மாநகர காவல்துறை ஆணையர் டாக்டர் ரவீந்தர் சிங்கால் தெரிவித்துள்ளார்.

நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும், மாநில அமைச்சர் திரு. சந்திரசேகர் பவன்குலே இன்று காலை அப்பகுதியில் நேரில் ஆய்வு செய்ய உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வரி செலுத்துவோரின் வசதிக்காக அனைத்து வங்கிகளும் இம்மாதம் 31ஆம் தேதி இயங்கும் என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டில் கணக்குகளை முடிப்பதற்கு அன்றைய தினம் விடுமுறை என்று முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதும், நாடு முழுவதும் சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிகளை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அது கூறியுள்ளது.

மார்ச் 31ஆம் தேதி அனைத்து வங்கிகளும் வழக்கமான வேலை நேரத்தில் திறந்திருக்கும் என்றும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆந்திர மாநிலம் அமராவதியில் பல்வேறு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்வதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டதாகவும், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திராவின் தலைநகராக மீண்டும் நிறுவப்பட உள்ள அமராவதியில் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு தொடர்பாக அமைச்சர்கள் குழு பரிந்துரைகளை அளித்தது.

மேலும் தலைநகர் பிராந்திய மேம்பாட்டு ஆணையத்தின் ஆணையர் அளித்த பரிந்துரையின் மீதும் நடவடிக்கை எடுக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அமராவதியில் சட்டப்பேரவை உயர்நீதிமன்றம், தலைமைச் செயலகம் மற்றும் பல்வேறு துறைகளின் தலைமை அலுவலகங்களைக் கட்டுவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரவும் ஆந்திர மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி உலகில் பிரபலமாக உள்ள **Truth** சமூக வலைதளத்தில் இணைந்துள்ளார்.

இது அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு சமூக ஊடக தளமாகும்.

இதில் இணைந்துள்ளது குறித்து மகிழ்ச்சி அடைவதாக பிரதமர் தனது முதல் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த சமூக வலைதளத்தில் தொடர்ந்து அர்த்தமுள்ள உரையாடல்களில் தாம் ஈடுபட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக அதிபர் திரு. ட்ரம்ப், தனது **Truth** சமூக வலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி – **Lex Fridman** ஆகியோர் இடையிலான **Podcast** ஒலிபரப்பை பகிர்ந்துள்ளார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்திற்கு 2022ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்க மசோதா நேற்று மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இம்மாதம் 31ஆம் தேதியுடன் முடிவடையும் நிதியாண்டில் கூடுதலாக செலவிடப்பட்ட தொகையை ஈடு செய்ய இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நிதியில் இருந்து அம்மாநிலத்திற்கு நிதி ஒதுக்க அரசுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

சத்தீஸ்கட் மாநிலத்தில் நேற்று மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 20 பேர் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

பிஜப்பூர் மாவட்டத்தில் 19 மாவோயிஸ்ட்கள் சரணடைந்ததாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜிதேந்திர குமார் யாதவ் கூறினார்.

சரணடைந்த மாவோயிஸ்ட்களுக்கு மாநில அரசின் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

**Kondagaon** மாவட்டத்தில் மற்றொரு மாவோயிஸ்ட் தீவிரவாதி காவல்துறையினரிடம் சரணடைந்தார்.

இந்நிலையில் தண்டேவாடா அருகே 5 கிலோ எடைகொண்ட வெடி மருந்துகளை நேற்று பாதுகாப்புப் படையினர் கண்டெடுத்தனர்.

<<<<>>>>

ஜம்மு கஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கையில் ஒரு தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

அங்குள்ள ரஜ்வார் பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் காணப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பாதுகாப்பு படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் அந்த தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகவும் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சிரியா, லெபனான் இடையே எல்லையில் கடந்த சில நாட்களாக நீடித்து வந்த மோதலுக்கு இரு நாடுகளும் தற்காலிக தீர்வு கண்டுள்ளன.

இதையடுத்து 2 நாட்கள் போர்நிறுத்தம் செய்ய இரு நாடுகளுக்கு இடையே நேற்று ஒப்பந்தம் ஏற்பட்டது.

முன்னதாக சிரியா எல்லையில் இருந்து லெபனான் எல்லையை நோக்கி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதை அடுத்து அதற்கு பதில் தாக்குதல் தர லெபனான் அதிபர் உத்தரவிட்டார்.

இதையடுத்து இரு நாடுகளின் எல்லையில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த மோதலில் லெபனானைச் சேர்ந்த 7 பேர் உயிரிழ்நததாகவும், 4 வயது சிறுமி உட்பட 52 பேர் காயமடைந்ததாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

லெபனானின் ஹிஸ்புல்லா போராளிக் குழுவைச் சேர்ந்தவர்கள் கடந்த சனிக்கிழமை சிரியாவுக்குள் நுழைந்து 3 வீரர்களைக் கடத்தி லெபனானுக்கு கொண்டு சென்று அவர்களைக் கொன்றதாக சிரியாவில் உள்ள இடைக்கால அரசு குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

<<<<>>>>

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று **Basel** நகரில் தொடங்குகிறது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஆர்த்தி சாரா – வர்ஷினி இணை, நெதர்லாந்தின் **Debora** – டென்மார்க்கின் சாரா இணையை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் இந்தியாவின் கிரன் ஜார்ஜ், லக்ஷயா சென், ஹெச்.எஸ். பிரனாய், மால்விகா பன்சோட் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

--------------

உலகக்கோப்பை கபடி போட்டியின் மகளிர் பிரிவு முதல் ஆட்டத்தில் இந்தியா இன்று வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது.

**Wolverhampton** –ல் இப்போட்டி மாலை மணி 5.30 மணிக்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா இன்று ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 10.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**